என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்

ஜன 27

பழநியில் தைபூசம்

December 2016

FREE ISSUE

லண்டன்

தமிழர்

# தகவல்

London Tamil's Information



மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest


Lakshamis
Jewellers
லண்டனில்
No1
நகை
மாளிகை
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை


BRINGING
GREAT
FOOD
TO
LIFE...
NO 1 Brand
Nelli
Orange Soda
Quento
BRAND Niru
Quality you can taste
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk



# தமிழர் தகவல்
## Tamil Information

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் — குறள்


திருவள்ளுவர் ஆண்டு 2047

மார்கழி

மலர் : 15

இதழ் : 163

டிசம்பர் - 2016



முகவரி :
41, HADDINGTON ROAD
BROMLEY
KENT BR1 5RG, U.K.
Email : jothy5@yahoo.co.uk



வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

கணக்கு எண் : 29513668
வங்கி இலக்கம் : 77 91 29
வங்கி : Lloyds TSB

ஆசிரியர் : அரவிந்தன்
Editor : Aravindan

வடிவமைப்பு :
தமிழ் அலை
Layout :
Tamil Alai, tamilalai@gmail.com



படைப்புகள் யாவும்
ஆக்கியோரின் உரிமைகளே



4000 பிரதிகள்


தமிழர்களே! தமிழர்களுடன்
தமிழில் பேசுங்கள்!!


UNLEASH
THE POWER OF GOLD

THARANI

JEWELLERY & PAWNBROKERS
UKS CHEAPEST GOLD LOANS
STARTING FROM 2.95% PER MONTH

GOLD
LOANS

THE CHEAPEST GOLD
LOAN PROVIDEDR IN WEMBLEY

* NO Need to Sell Your Valuable Jewellery, When You can Get Quick Loan and Easy Terms.
* Use Your Idle Jewellery for Productive Purpose by Availing Our Loans.
* Loans Against Gold from 2.95% per Month, it's U.K's lowest Rate for Gold Loans.
* Cheaper than Unauthorised Overdrafts from High Street Banks.
* No Credit Check Required
* Simple Procedure. Loan sanctioned in Just 5 Minutes.

Our Rates of Interest

£100 to £4999 2.95 % Per Month
APR 38.7%

**Loan Term:** Up to 6 Months
Documents Required
Photo ID - Passport or UK Driving Licence
Proof of Address - Any Utility Bill or Bank Statement not Older than 3 Months

Terms and Conditions

The maximum loan term is for 6 months. If loan cannot be repaid during this period, a renewable can be made, after interest on the loan is paid in full.

If you have borrowed £75 or less, and if you redeem the loan in 6 months time we will keep the pledged Gold. If you have borrowed more than £75 we are entitled to sell your pledge to cover the outstandings. The pledge


வாசகர்களே! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள்!


Lyca TV
உலகின்
மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
தமிழ்த் தொலைக்காட்சிகள்
STAR VIJAY
VENDHAR TV
ATHAVAN TV
JAYA TV
KALAIGNAR
PUTHUYUGAM
PUTHIYATHALAIMURAI
RAJ TV
JAYA MOVIE
7S MUSIC
JAYA MAX
CAPTAIN TV
DEEPAM TV
RAJ DIGITAL PLUS
THANTHI TV
CHITHIRAM
DAN TV
VASANTHAM TV
NETHRA TV
PEPPERS TV
POLIMER TV
MAKKAL TV
MEGA TV
SIRIPOLI
MEGA MUSIC
MURASU
MEGA 24
RAJ MUSIX
ISAIARUVI TV
AMN TV
ANGEL TV
AMBAAL TV
SANKARATV
MY JESUS TV
OHM TV
1000க்கும் அதிகமான சூப்பர்ஹிட் திரைப்படங்கள்
1 YEAR SUBSCRIPTION
£99
INCL. LYCATV SET TOP BOX
App Store
Google play
Roku
Windows Store
SMART TV
chromecast
LG Smart TV
amazon
MORE INFO : CALL OR VISIT US NOW :
0203 318 2004
www.lycatv.tv
DOLBY DIGITAL PLUS
4K
HD
WiFi
Bluetooth





புதிய பொலிவுடன் இனிதே உங்கள் இல்லம் நோக்கி வருகிறது

## ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் தொலைக்காட்சி

24 மணிநேரமும் கீழ்கண்ட தளங்களில் அம்மனை தரிசித்து மகிழுங்கள்...

**www.ammanealing.org** என்ற இணையத்திலும்,

சாலை டிவி மற்றும் **Smart Phone, Ipad, Tablet**

மேலதிக விபரங்களுக்கு :

**5 Chapel Road, London W13 9AE**

**email:** info@ammanealing.org, **Phone:** 0044 - 208 810 0835

Charity No: 1014409

"Ammanai Saran Addainthal Athika Varamperalam"

**SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST** Founded on 10-08- 1991 Charity No: 1014409

5 CHAPEL ROAD LONDON W13 9AE. TEL: 020 8810 0835/020 8840 0485

www.ammanealing.com Email: info@ammanealing.org

கோவிலின் செலவுகள் தவிர்ந்த வருமானத்தில் 1/3 பகுதி ஈழத்தில் அவதியுறும் மக்களைப் பராமரிப்பதற்கென பயன்படுத்தப்படுகிறது.

# முச்சக்கர வண்டி ஒன்றிற்கான பெறுமதி £50 பவுண்கள்.

# ஆலயத்தின் சார்பாக 100 வண்டிகள் வழங்கி உதவும் நோக்கத்தில் அடியவர்களின் நன்கொடைகளை எதிர்பார்த்துள்ளோம்.

**அவயங்களை இழந்து வலுவிழந்து துயருறும் ஈழமக்களின் வாழ்வைக் கட்டி எழுப்ப உங்கள் ஆதரவை அள்ளி வழங்குங்கள்.**

**Bank Details Name: SKTA Temple Trust - W139AE LLOYDS BANK**
**SORT CODE: 30-98-91 | ACCOUNT NO: 02717646**








Athavan
ATHAVAN MEDIA
AthavanTV
Athavannews.com
Athavanradio
News I Movies I Music I Entertainment I Sports I Live Events I Life Style I Spritual I Dramas
ஆதவன் TV உங்கள் இல்லத்திரை
லண்டனில் இருந்து உலகெங்கும் 24 மணிநேரமும்
இயங்கும் தமிழர்களுக்கான தனித்துவ அலைவரிசை
Satellite
Eurobird 9a | Freq 11766
Vertical Symbol Rate 27500 | FEC ¾
ஆதவன் இணையத்தளம்
இலங்கைச் செய்திகள்
உலகச் செய்திகள்
இந்தியச் செய்திகள்
விளையாட்டுச் செய்திகள்
சினிமாச் செய்திகள்
சிறப்புக் கட்டுரைகள்
ஆன்மீகம்
www.athavannews.com
ஆதவன் வானொலி தமிழர்களின் உலகம் தழுவிய குரல்
ON AIR 0044 208 144 6927
Satellite
Eurobird 9a | Freq 11766
Vertical Symbol Rate 27500 | FEC ¾
விளம்பர தொடர்புகளுக்கு
Mobile: +44 7459 300554
Email : sales@athavantv.com
You Tube
www.athavantv.com I www.athavannews.com I www.athavanradio.com



கணேஷா தமிழ் கடை
Ganesha Asian Supermarket
433 BROMLEY ROAD DOWNHAM BR1 4PH
020 8698 0990
Lewisham, Catford, Downham, Bromley வாழ் தமிழ் மக்களுக்கு ஒரு புதிய உதயம்
கணேஷா தமிழ் கடை
* இலங்கை இந்திய உணவுப் பொருட்கள்
* மளிகைப் பொருட்கள்
* மரக்கறிகள் பழங்கள்
* உடன் மீன் இறைச்சி வகைகள்
* குடிபானங்கள்
* வீட்டு உபயோகப் பொருட்கள்
* பூஜைப் பொருட்கள்
அனைத்தையும் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்
இலங்கை இந்திய ஐரோப்பிய நாடுகளுக்கான
பதிவு செய்யப்பட்ட துரித பணமாற்று சேவை
விசேட விலைச்சலுகையில் ஏராளமான பொருட்கள் - இன்றே விரையுங்கள்
Ganesha Asian Supermarket
433 BROMLEY ROAD DOWNHAM BR1 4PH
Contact for more Information 020 8698 0990
EClipse
EXPOSURE
Photography & Videography
07508437935 - 07862244312

மறைவு :
14.12.2016



# திருமதி. சரஸ்வதி ஆறுமுகம்

(இளைப்பாறிய உப அதிபர், யாழ்/ இந்து ஆரம்பப் பாடசாலை)

யாழ். இணுவிலைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சரஸ்வதி ஆறுமுகம் அவர்கள் 14/12/2016 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான பொன்னையா செல்லமுத்து தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா செல்லாச்சி தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் (இளைப்பாறிய ஆசிரியர் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை) அவர்களின் மனைவியும், ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, குகமூர்த்தி, குககுமாரி, கோணேஸ்வரி, ஆறுதிருமுருகன், விக்னேஸ்வரி, கேதீஸ்வரி ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 15122016 வியாழக்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பி.ப 04:00 மணியளவில் இணுவில் பூவோடை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்

ஆறுதிருமுருகன் (மகன்)

# கொட்டிக்கிடக்கும் குப்பைகள்!

இலங்கையின் வடக்கே ஒரு மாகாண சபை இருக்கிறது. தமிழனுக்கு உலகத்தில் இருக்கும் ஆட்சியதிகாரம் அது ஒன்றுதான். எதுவும் அற்ற வெற்றுக்கூடு எனினும் பல வேடிக்கை மனிதர்களை அது கொண்டிருக்கிறது. அடிபிடிகள் அவலட்சணமான அரசியல் காரியங்கள் அங்குதான் நடக்கின்றன. ஒரு கட்சியே ஆளும் கட்சியாகவும் எதிர்க்கட்சியாகவும் அமர்ந்திருக்கும் அற்புதக்காட்சி அங்குதான் உண்டு. "இலங்கைத்தமிழன் ஒரு அரசியல் விலங்கு" என ஒரு அரசியாளனின் கூற்று மெய்ப்பிக்கப்பட்டிருக்கும் மேடையே அது.

ஜே.ஆர்.பின்னால் திரிந்தவர்கள் பதவிகட்சிகாக பச்சோந்திகளாக நடந்து கொண்டவர்கள், கொள்கை அற்றவர்கள், கொள்ளை அடித்தவர்கள், மாத்தையா பின்னால் மகுடி வாசித்தவர்கள் இந்திய இராணுவத்துடன் இயங்கியவர்கள் உரிமைப் போருக்கு உதவ மறுத்தவர்கள் தேசியத்தை தமது சுயநலத்துக்கும் சுரண்டல்களுக்காகவும் பேசியர்வர்கள், ஆளுநருக்கான அடிவருடிகள், அளுக்காறு கொண்டவர்கள், அரசியல் அங்காடிகளின் அடியாட்கள் என்று இந்தச்சபை குப்பைக்குழியாகி நிரம்பி வழிகின்றது. குறிக்கோள் இன்றிக் கோலோச்சப் பார்க்கின்றது.

வடமாகான சபையின் அறுபத்து நாலாவது அமர்வு இந்தக் குப்பைகளால் நாற்ற மடிக்கத் தொடங்கிவிட்டது. வெறும்வாய் மெல்லம் எதிரிகட்கு இவை மென்று தின்னும் 'அவல்' ஆய்விட்டது. அரசும் அதன் ஆளுநரும் ஆனந்தப்பட்டிருப்பார்கள் ஊடகங்கள் பெரிதாக ஊதத் தொடங்கிவிட்டன. "இவர்களுக்காக ஒரு தமிழ் ஈழம்? என எதிரி எக்காளமிட்டுச் சிரிக்கிறான். எந்தச் சபைக்கும் ஒரு தலைமை உண்டு; நெறிப்படுத்த ஆனால் இந்த சபைக்கோ செங்கோலே திசைமாறிக்கிடக்கிறது.

தகுதியற்ற பதவிகளைத் தக்கவைப்பதற்கும் தரமற்ற தலைமைத்துவத்தை ஏற்படுத்துவதற்கும் ஒரு குழுவினர் ஒன்றாகி நிற்கின்றனர். குப்பைகள் கூழங்கள் ஆகின்றன. இவர்களை இயக்கும் இயக்குநர்கள் நாடாளுமன்றத்துள் குளிர்காய்கின்றனர். மக்களை ஏமாற்றி மார்வாடிக்கடை நடத்துகிறவர்கள், சொகுசு வாகனங்களுக்காகச் சோரம் போனவர்கள் என்று இவர்கள் கதை நீண்டுசெல்கிறது. இத்தனைக்கும் ஒரு பழம்பெரும் அரசியல் கட்சியின் பங்குதாரர்கள் என்பது இவர்களின் தம்பட்டமாக இருக்கிறது.

இவர்கள் என்ன என்னிய சிங்கம் என்ற உழைப்பாளியின் காலத்து வாரிசுகளா? தமிழரசு மூளை என்ற நவரத்தினத்திடம் பாடம் கேட்டவர்களா? எழுத்துலக ஜாம்பவான் எஸ்.பி.சிவநாயகத்திடம் எழுதப்பழகியவர்களா? நேற்று அடித்த 'வாடையில் மேலே எழுந்து மதிலைத்தாண்டி விழுந்த நனைந்துபோன நாற்றமடிக்கும் குப்பைகள்தான் இப்போ "நாணயம்" பேசுகின்றன. வடக்கு படிக்க இன்னும் பல காலம் ஆகுமோ?

-கொழும்பிலிருந்து கிடைக்கப்பெற்ற கடிதம்

# செல்வி ஜெயலலிதா
# ஜெயராம் சுயசரிதை



ஜெயலலிதா ஜெயராம் அவர்கள், தமிழக முதல்வரும், அ.தி.மு.க கட்சியின் தலைவரும் மற்றும் புகழ்பெற்ற முன்னால் தமிழ் நடிகையும் ஆவார். தமிழ் திரைப்பட துறையில் எம்.ஜி.ஆர், சிவாஜி கணேசன், முத்துராமன், ஜெயசங்கர் போன்ற பல முன்னணி நடிகர்களுடன் நடித்துள்ளார். எம்.ஜி.ஆருக்கு பிறகு அ.தி.மு.க கட்சியின் சிறந்த தலைவியாகவும், தமிழகத்தின் முதல் பெண் முதலமைச்சராகவும், எம்.ஜி.ஆரின் அடுத்த வாரிசாகவும் விளங்கினார். தமிழக அரசியலில் தமிழகத்தை நீண்ட நாள் ஆண்ட பெரும் தலைவர்களுள் ஒருவரான ஜெ.ஜெயலலிதா அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் சாதனைகளைப் பற்றி மேலும் விரிவாக காண்போம்.

பிறப்பு: 24 பிப்ரவரி 1948

பிறந்த இடம்: மைசூர், இந்தியா

தொழில் துறை: நடிகை மற்றும் அரசியல்வாதி

ஆரம்ப வாழ்க்கை:

'ஜெயலலிதா' என்று எல்லோராலும் அழைக்கப்படும் அவரின் இயற்பெயர் கோமலவள்ளி. இவர் ஜெயராம் மற்றும் வேதவள்ளி தம்பதியருக்கு மகளாக மைசூர் என்ற இடத்தில் பிறந்தார். அவரது குடும்பம் அரச மைசூர் வம்சாவழியை சார்ந்தது. மைசூர் நீதிமன்றத்தில் அரச மருத்துவராக பணியாற்றிய அவருடைய தாத்தா, மைசூர் மன்னர் ஜெயசாமராஜெந்திரா உடையார் அவர்களின் சமூக இணைப்பைப் பிரதிபலிப்பதன் காரணமாக தனது குடும்ப உறுப்பினர்களின் பெயர்களில் முன்னொட்டாக 'ஜெயா' என்ற சொல்லை வழக்கமாக சேர்த்தார். ஜெயலலிதா அவர்கள் தனது இரண்டு வயதிலேயே தன் தந்தையை இழந்தார். அதன் பிறகு, அவரின் அம்மா மற்றும் தாய்வழி தாத்தாபாட்டி வாழ்ந்த பெங்களூருக்குச் சென்றார். பெங்களூரில் தங்கியிருந்த அந்த குறுகிய காலத்தில், அவர் சில ஆண்டுகள் 'பிஷப் காட்டன் பெண்கள் உயர்நிலை பள்ளியில்' கல்வி பயின்றார். வெள்ளித் திரையில் அவரது தாயாருக்கு நடிக்க வாய்ப்புக் கிடைத்ததால், அவர் சென்னை சென்றார்.

சென்னையிலுள்ள சர்ச் பார்க் ப்ரேசெண்டேஷன் கான்வென்ட்டில்' தனது கல்வியைத் தொடர்ந்த இவர், பின்னர் 'ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியில்' தனது பட்டப்படிப்பை முடித்தார். தனது குழந்தை பருவத்திலிருந்தே, கல்வியில் சிறந்து விளங்கய ஜெயலலிதா அவர்கள், சட்டம் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்டார். ஆனால், விதி அவருக்கென்று வேறு திட்டங்கள் வைத்திருந்தது. குடும்ப நிதி கட்டுப்பாட்டின் காரணமாக, அவரது தாயார் அவரை திரையுலகில் நடிக்க வலியுறுத்தினார். 15 வயதில், அவர் ஒரு முன்னணி கதாநாயகனுடன் அறிமுகமானார். அதுவே அவருடைய புகழ்பெற்ற திரைப்பட தொழிலுக்கு ஆரம்பமாக இருந்தது.

தொழில்:

ஷங்கர்.வி.கிரி அவர்கள் இயக்கிய "எபிஸில்" என்ற ஆங்கில படம் மூலமாக தனது திரையுலக வாழ்க்கையைத் தொடங்கினார். ஆனால், அப்படம் அவருக்கு எந்த பாராட்டும் பெற்றுத் தரவில்லை. 1964ல், திரையுலகில் அவருக்கென்று ஒரு தனி வழியையும், ரசிகர்களின் மனதில் நீங்கா இடமும் பிடித்தார். ஜெயலலிதா அவர்களின் முதல் இந்திய படம், 1964 ல் வெளியான "சின்னடா கொம்பே" என்ற கன்னட படம். இப்படம் அவருக்கு பெரும் விமர்சனங்களையும், பார்வையாளர்களின் கைத்தட்டலையும் பெற்றுத் தந்தது. ஒரு வருடம் கழித்து, அவர் "வெண்ணிற ஆடை" என்ற படம் மூலமாக தமிழ் திரையுலகில் அவரது நடிப்பைத் தொடங்கினார். அதன் பிறகு, அவர் தெலுங்கு சினிமாவில் தோற்றமளித்தார். அடுத்தடுத்த ஆண்டுகளில், அவர் பல தமிழ் படங்களில் நடித்து தனது நடிப்பு திறமையை வெளிக்கொண்டு வந்தார். அவர் நடித்த பல படங்கள் நன்றாக ஓடி பாக்ஸ் ஆபிஸில் இடம்

பெற்றது. நடிகர் எம்.ஜி.ஆருடனான அவரது ஜோடி பெரும் வெற்றி பெற்றுத் தந்தது மற்றும் அவரது ஆர்வலர்களையும் மிகவும் கவர்ந்தது. திரையுலகின் பிற்பகுதியில் அவர் ஜெய்ஷங்கர், ரவிச்சந்திரன் மற்றும் சிவாஜி கணேசன் போன்ற கதாநாயகர்களுடன் இணைந்து நடித்துள்ளார். 1968ல், அவர் தர்மேந்திரா நடித்த "இஜத்" என்ற இந்தி படத்தில் நடித்துள்ளார். அரசியலில் சேரும் முன் தனது திரை வாழ்க்கைக்கு ஒரு முடிவை அவரது கடைசி மோஷன் பிக்சர் படமான 1980ல் வெளியான "நதியை தேடி வந்த கடல்" இருந்தது.

அதே ஆண்டில், அஇஅதிமுக நிறுவனரான எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள், ஜெயலலிதா அவர்களை பிரச்சார செயலாளராக நியமித்தார். நான்கு ஆண்டுகளுக்கு பின்னர், அவர் மாநிலங்களவைக்கு நியமிக்கப்பட்டார். இதுவே, அவரை திறம்பட இந்திய பாராளுமன்றத்திற்கு செயல்பட வழிவகுத்தது. பின்னர், அவர் தீவிரமாக அஇஅதிமுக அரசியல் கட்சி உறுப்பினராக ஈடுபட்டார். அவர் அரசியலில், எம்.ஜி. ஆரின் கட்சி சார்புடையவராக திகழ்ந்தார். இதுவே, ஜெயலலிதா அவர்களை, அஇஅதிமுக கட்சியின் எதிர்கால வாரிசாக, ஊடகங்களை மதிப்பிட செய்தது. எம்.ஜி. ராமசந்திரன் அவர்கள் தலைமை அமைச்சராக பணியாற்றிய போது, ஜெயலலிதா அவருடைய அரசியல் கட்சியின் செயலாளராக இருந்து தன் தீவிர பங்கை வெளிப்படுத்தினார். அவரது மரணத்திற்கு பின், ஜானகி ராமச்சந்திரன் அவர்களை அதிமுகவின் எதிர்கால தலைவராக சில கட்சி உறுப்பினர்கள் பரிந்துரைத்தனர். இதன் காரணமாக கட்சி இரண்டாக பிரிந்தது ரூ ஒன்று ஜானகி ராமச்சந்திரன் தலைமையிலும், மற்றொன்று ஜெயலலிதா தலைமையிலும். எனினும், 1988 ஆம் ஆண்டில் அவரது கட்சி, இந்திய அரசியலமைப்பின் 356 கீழ் தள்ளுபடி செய்யப்பட்டது. 1989ல், அதிமுக கட்சி ஒன்றுபட்டு, ஜெயலலிதா தலைமையில் செயல்பட்டது. அவர் மேல் பல குற்றச்சாட்டுகளும், சர்ச்சைகளும் இருந்தாலும், அவர் மூன்று முறை (1991, 2001, 2011) மாநில சட்டமன்ற தேர்தல்களில் வெற்றி பெற்று, தலைமை அமைச்சர் பொறுப்பை ஏற்றார்.

பங்களிப்புகள்:

அரசாங்க நிதி மற்றும் நிலத்தை சட்டவிரோதமாக கையகப்படுத்தும் மோசடி, குற்றச்சாட்டுகள் மற்றும் பல சர்ச்சைகள் இருந்தாலும், மாநில மக்களின் மீது அவர் கொண்ட பற்றும், செலுத்திய பங்களிப்பும் அவரை மூன்று முறை ஆட்சிக்கு வர செய்தது. அவரது பதவிக்காலத்தில், அவர் மக்களின் நன்மைக்காக தீவிரமாக வேலை செய்தார். மாநில தொழில்துறை வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக அவர் பல தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களைத் திறக்க முயன்றார். இதுவே, மாநில வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான ஒரு முக்கிய பங்களிப்பாக இருந்தது. அதேநேரத்தில், அவர் மாநிலத்தின் வறுமை, வன்முறை, மற்றும் ஊழலை நீக்க மிகவும் கவனம் செலுத்தி வருகிறார்.

விருதுகள்

'பட்டிக்காடா பட்டணமா' என்ற படம் இவருக்கு சிறந்த தமிழ் நடிகைக்கான "பிலிம்பேர் விருதினை" வாங்கிக்கொடுத்தது.

சிறந்த தெலுங்கு நடிகைக்கான பிலிம்பேர் விருதினை 'ஸ்ரீ கிருஷ்ணா சத்யா' என்ற படம் அவருக்கு வழங்கியது.

சூர்யகாந்தி படம், இவருக்கு சிறந்த தமிழ் நடிகைக்கான பிலிம்பேர் விருதினை வழங்கியது.

தமிழ்நாடு அரசு இவருக்கு 'கலைமாமணி' விருது வழங்கி கௌரவித்தது.

சென்னை பல்கலைக்கழகம் மூலமாக இலக்கியத்தில் 'கவுரவ டாக்டர் பட்டம்' பெற்றார்.



தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி. ஆர் மருத்துவ பல்கலைக்கழகம், அறிவியலுக்கான 'கவுரவ டாக்டர் பட்டம்' வழங்கியது.

'கடிதங்களுக்கான டாக்டர் பட்டத்தை' மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் இவருக்கு வழங்கியது.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்திலிருந்து அறிவியலுக்கான 'கவுரவ டாக்டர் பட்டம்' கிடைத்தது.

பாரதிதாசன் பல்கலைக்கழகம், 'கடிதங்களுக்கான டாக்டர் பட்டத்தை' வழங்கியது.

சட்டத்திற்கான 'கவுரவ டாக்டர் பட்டத்தை', தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகம் வழங்கியது.

காலவரிசை

*1948:* மைசூர் நகரில், பிப்ரவரி 24ஆம் தேதி பிறந்தார்.

*1961:* 'எபிஸில்' என்ற ஆங்கில படம் மூலமாக திரையுலகுக்கு அறிமுகமானார்.

*1964:* கன்னட படத்தில் முதல் முறையாக பங்கேற்றார்.

*1965:* தமிழ் படங்களில் அறிமுகமானார்.

*1972:* 'பட்டிக்காடா பட்டணமா' என்ற படம் சிறந்த தமிழ் நடிகைக்கான பிலிம்பேர் விருதினை இவருக்கு பெற்றுக் கொடுத்தது.

*1980:* பிரச்சார செயலாளராக எம்.ஜி. ஆரால் தேர்வு செய்யப்பட்டார்.

*1984:* மக்களவைக்காக பரிந்துரைக்கப்பட்டார்.

*1989:* சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்றார்.

*1991:* முதல் முறையாக தமிழக முதல்வராக பொறுப்பேற்றார்.

*2002:* இரண்டாவது முறையாக மாநில சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்றார்.

*2011:* தற்போது தமிழக முதல்வராக பணியாற்றுகிறார்.



# வர்தா புயல்

பெருங்கடலில் உறங்கிவிட்டு
கரையோர கதவுகளை உடைத்தெறிந்து
கடலுக்குள் இருக்கும் நீரை
குடிமனைக்குள் அழைத்துவந்து !!
இடியும் மழையுமாய்
இன்னல்களை கொடுக்கும்
'வர்தா' புயல் போல்!
கருங்கூந்தலைக் கலைத்துவிட்டு
கண்கள் இரண்டுக்கும் .
கருமை பூசிவிட்டு !!
உதட்டின் மேல் .
புன்னகை மலர்களை
விதைத்துவிட்டு !!
அன்பு என்னும் வலை வீசி
அதில் ஆயிரம்
உயிர்களை விலைபேசி!
ஆண்களின்
உணர்வுகளை உடைத்தெறியும்
'வர்தா' புயலோ ??
இன்றைய பெண்கள் !!

# மகானந்த சித்தர்

தமிழ் நாடு வேலூர் மாவட்டத்தில் உள்ள கே. வி. குப்பம் பகுதியில் உட்பட்ட மாதேவ மலையில் வீற்றிருக்கும் சிவபெருமான் மகாதேவர் அவதாரத்தில் வீற்றிருக்கிறார். முன்னாரு காலத்தில் மக்கள் மாதேவரை வணங்க கால்நடையாக மலைக்குச் சென்று வழிபட்டு வந்தனர்

அதன் பின் மகானந்த சித்தர் அம்மலைக்கு வந்து சிவனை வழிபட்டார். மலையின் உச்சியில் மூலவர் மட்டுமே இருந்த்த. இக்கோயில் 7 அடுக்குகளைக் கொண்ட கோயிலாகவும்,. விநாயகர் முருகர் வள்ளி தெய்வயானை படைக்கும் கடவுள் பிரம்மா காக்கும் கடவுள் விஷ்ணு மற்றும் துர்க்கை, ல்ஷ்சுமி, சரஸ்வதி, ஆஞ்சனேயர் நவக்கிரகங்கள் கொண்ட கோயிலாக உருவாகி வருகிறது. சித்தரின் முயற்சியால் இன்று அம்மலையில் திருப்பணி வேலைகள் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. 2015ல் சித்திரையில் மகாகும்பா அபிஷேகம் நடக்க இருக்கிறது.

ஆண்டு தோறும் ஆகிலப் புத்தாண்டு தினத்தன்றும் சித்திரைப் புத்தாண்டும் கொண்டாடப்பட்டு வருகிறது.

2003 ஆண்டு முதல் நீர், உணவு, துறந்து வாழ வேண்டும் என சித்தருக்குக் இறைவன் கூறி மறைந்தார், அதே போல் இன்றும் சித்தர் இருக்கிறார்,.விஷேடம் என்ன வெனில் சித்திரைப் புத்தாண்டு மட்டும்தான் மகாநந்த சித்தர் சுவாமிகளுக்கு அபிஷேகம் நடக்கும் அன்றுதான் அவர் பல்சுத்தம் செய்வார் புத்தாடை அணிவார், அப்புத்தாடை அடுத்த ஆண்டு சித்திரை மாத்த்தில் மாற்றி இடுப்புத் துணியாக ஒரு துண்டு அணியப்படும். இதுவும் இறைவன் கட்டளை எனக் கூறப்படுகிறது. இவர் உடல் முழுவதும் விபூதி பூசி சஞ்சரித்து வருவதால் இவருக்கு விபூதி சித்தர் என்ற பெயரும் உண்டு, மக்களுக்கு மூலிகைகளைக் கொண்டு பல நோய்களை மாற்றியிருக்கிறார் பலனடைந்த பலரைச் சந்தித்தேன். மாற்றுத் திறனாளிகள் இவர்







ஆசி பெற்றுக் குணமடைந்திருக்கிறார்கள் என்ற செய்தியையும் அறிந்தேன். ஏழ்மையான குடும்பங்களுக்கு பண உதவி செய்து கல்லூரிகளில் கற்பதற்கு வசதி செய்து கொடுத்துக் காண்டு வருகிறார். பூஜைகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது,

தினசரி இக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் அனைவருக்கும் காலை முதல் இரவு வரை அன்னதானம் வழங்கப்படுகிறது, அதை நான் நேரில் பார்த்ததேன், பொருள்படைத்தோர் முடையாக அரிசி பருப்பு அன்றாடம் தேவையான காய்கள் கொடுத்து உதவுகின்றனர். கறவை மாடுகள் கன்றுக் குட்டிகளுடன் இங்கு இருக்கிறது. தன்ஆர்வத் தொண்டர்கள் பலர் பணி ஆற்றுகிறார்கள் கட்டிட வேலைகள் துரிதமாக நடைபெறுகிறது. 2016ம் ஆண்டு சித்திரை மாதம் மகா கும்பா அபிஷேகம் நடக்க இருக்கிறது, வசதி கிடைத்தால் நீங்கள் எல்லோரும் போய் பார்க்க வேண்டிய ஒரு கோயில்.

லிங்கானந்த சுவாமிகள் இன்று 11 2015 நள்ளிரவு ஆங்கிலப் புத்தாண்டு பிறந்தை முன்னிட்டு மகானந்த சித்தர் ஆசீர்வாதம் பெறுவதற்கு எம்மை அழைத்துச் சென்றார், அங்கு 2000 மக்கள் நடு இராத்திரியல் கூடியிருந்தனர்.

சித்தர் மூலவருக்கு சிறப்புப் பூஜை அபிஷேகம் செய்து அங்கு வந்த மக்கள் அனைவருக்கும் பெரியோர் சிறியோர் பணம் படைத்தவர் பணம் இல்லாதவர் என்ற பகுபாடு இல்லாது கைவிஷேம் (100 ரூபா) கொடுத்து ஆசீர்வாதம் வழங்கினார்.. எல்லோருக்கும் பொன்னாடை அவரே அளித்து கௌரவிக்கப்பட்டு ஆசி

வழங்கினார்கள்.

ஒரு முறை தான் என்னைப் பார்திருந்தார் இன்று அடையாளம் கண்டு பெயர் குறிப்பிட்டு அழைத்தமை அவர் ஞாப சக்தி வல்லமையைக் காட்டியது. அங்கு பணி புரியும் தொழிலாளர்கள் அனைவருக்கும் பொன்னாடை போர்திக் கௌரவித்தது குறிப்பிடத்தக்கது.

சித்தர் பட்டாசு கட்டுக்குத் தீ ஏற்றி வைத்து புத்தாண்டு சிறப்பாக்க் கொண்டாடப்பட்டது. வாங்க மேலும் பேசலாம்.

வணக்கம் சித்தர்கள் பற்றி நிறையப் படித்திருக்கிறேன். யாழ்ப்பாண அன்பர் திரு லிங்கசுவாமிகள் ஆசிய தமிழ் ஆராய்சி மையத் தலைவர் டாக்டர் சாமுவேல் மூலம் நேற்று முதல் நாள் எனக்கு அறிமுகம் ஏற்பட்டது, மறுநாள் லிங்க சுவாமிகள் (படத்தில் மஞ்சள் உடையுடன் இருப்பவர்) நாம் தங்கியிருக்கும் இல்லம் வந்து வேலூர் மாவட்டத்திலுள்ள மகாதேவ மலையில் இருக்கும் மகாநந்த சித்தர் இடம் அழைத்துச் செல்வதாகக் கூறி இன்று 1212 2014 வெள்ளிக்கிழமை அழைத்துச் சென்றார் சித்தர் தரிசனம் நிறையக் கிடைத்தது மகானந்த சித்தர் சுவாமிகள்வேலூர் மாவட்டத்தில் உள்ள மகாதேவ மலையில் வைரக் கோயில் அமைக்கும் திருப்பணியில் தன்னை ஈடுபடுத்தி உள்ளார், அங்கேயே இவர் தங்கி இருக்கிறார். அம்மலையில் 18 சித்தர்கள் இருந்ததாகக் கூறினர். சிறிய கோயிலாக இருந்த கோயிலைப் பெரிதாக்க மலையை உடைத்து வளாகத்தை பெரிதாக்கி கட்டிட வேலைகள் பொறியிலாளர்கள் இல்லாமல் சித்தரின் மேற்பார்வையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அங்கு பணி புரியும் தொழிலாளர்களும் சித்தரின் உத்தரவுப்படி கட்டிட வேலைகளைச் செய்து கொண்டிருக்கின்றனர் அதைச் செய் இதை இப்படிச் செய். கல்லை இந்த இடத்தில் உளியைவைத்து அடி அது பிளக்கும் என கட்டளைகளை இடுகிறார்.உடனே அந்த இடத்தில் கல்லுப் பிளக்கிறது. அவர் ஒரு இடத்தில் உட்கார்தைத நான் பார்க்கவில்லை.அவரைப் பார்ததும் யாழ்ப்பாண யோகர் சுவாமிகள் ஞாபகம் எனக்கு உண்டாயிற்று, அதிலும் சித்தர் சுவாமிகள் ஏதுவும் உணவு உண்ணாமல் காற்றை மட்டும் உணவாக எடுத்துக் கொண்டிருக்கிறார் என்பதை அறிந்து உடல் சிலிர்த்தது.நம்ப முடியவில்லை, உடலில் ஒரு குறையும் இல்லை.வாட்டம் இல்லை. உடல் பூராவும் திருநீறு. அதையே அடிக்கடி பூசுகிறார். கட்டிட வேலைகளை வெயிலில் நின்று மேற் பார்வை செய்கிறார் வியர்வை வந்ததை நான் காணவில்லை.குளிக்காததால் உடம்பில் இருந்து எந்தவித நாற்றமும் ஏதும் இல்லை இது நிஜம். நான் பார்த்தது. சுவாமிகளுக்கு வருடம் ஒரு முறை அபிஷேகம் நடக்கும் அன்று புதுத் துணி அளிப்பார்கள். அது அடுத்த வருடம் வரை அத்துணி இருக்கும் குளித்தல் தலை கழுவுதல் வருடம் ஒரு முறை என அறிந்தேன். அது ஏப்பில் 14ம் திகதி அபிஷேகம் நடக்கும்., பக்தர்கள் நிறைய வருவார்கள். அவர் பிறந்த நாள் 13.12.1930 என அறிகிறேன் நாளை அவர் 13.12.2014 அவர் பிறந்த நாள். தினமும் அன்ன தானம் பணம் படைத்தோர் அள்ளி அள்ளிக் கொடுக்கிறார்கள். வைரக் கோபுரப் பணியும் நடைபெறுகிறது. முடிந்தால் விரும்பினால் ஆர்வம் இருந்தால் வேலூர் மாவட்டம் மகாவேதலையில் உள்ள கோவிலையும் சித்தரையும் சென்று பாருங்கள் முனகூட்டி தகவல் தெரிவித்துப் போவது நல்லது. இதுவும் ஒரு அனுபவம்,.

# ஈழத்தைச் சேர்ந்த இரு இசை விற்பன்னர்களுக்கு இங்கிலாந்தில் கௌரவம்



- மு.க.மாசிலாமணி

இங்கிலாந்தில் இயங்கும் இந்தியக் கலைகள் அபிவிருத்தி அமைப்பின் - The Indian Arts Development Trust - Milapfest - இன் கணிப்பு

"கலைகளின் ஊடாக உள்ளங்களை ஐக்கியப்படுத்தல்" "Uniting Hearts Through Arts" என்ற தாரக மந்திரத்தை அடிநாதமாகக் கொண்டு பண்பட்டவொரு உலக சமுதாயத்தினை உருவாக்கும் நோக்குடன் ஐக்கிய இராச்சியத்தில் இயங்கிவரும் - "Milapfest - The indian Arts Development Trust" என்ற அமைப்பு இசை, நடனம் போன்ற இந்திய நுண் கலைகளை - Fine Arts- சர்வதேச மட்டத்தில் மிகக் குளிப்பாகப் பல்லினக் கலாச்சாரங்களை அங்கீகரித்து ஆதரவளித்து ஒத்துழைப்பு வழங்கும் பிரித்தானிய நாட்டில் Multi curturalBretain- வளர்ப்பதற்குப் பிரித்தானிய கலைகளின் சங்கம் & Arts Council England இந்திய உயர் ஸ்தானிகர் அலுவலகம் - indian High commision In U.K. ஆகிய நிறுவனங்களின் அனுசரனையுடன் பல செயற்றிட்டங்களை மிக முனைப்புடன் முன்னெடுத்து வருகின்றது. அந்த வகையில் நுண்கலைகளில் பெரிதும் அக்கறையுடனும் ஆர்வத்துடனும் ஈடுபட்டு நிறைவான பயிற்சியின் மூலம் அக்கலைகளில் மிக உயர்வான தேர்ச்சி பெற்று இந்தியக் கலைகளின் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பு நல்கும்



கலைஞர்களை அடையாளங்கண்டு அத்தகைய கலைஞர்களைக்கௌரவிப்பதன் ஊடாக அவர்களை மேலும் உயர் தகமை எய்த ஊக்குவிப்பதுடன் அவர்களை போன்று கலைகளில் ஆர்வமும் ஆற்றலும் உடையவர்களைக் கலைகளில் ஈடுபாடு கொள்ளச் செய்யவும் ஆகிய நோக்கங்களுடன் "தேசிய விருது வழங்கும் திட்டம் "The National Indian Arts Awards" Milapfest - 2015 ல் ஆரம்பிக்கப்பட்டு வருடந்தோறும் விருது வழங்கும் விழா நடத்தப்பட்டு வருகின்றது.

2016 ம் ஆண்டிற்கான மேற்படி வைபவம் அண்மையில் இலண்டன் மாநகரின மையப்பகுதியில் அமைந்துள்ள நேரு நிலையத்தில் Nehru Centre - Milapfest இன் தலைவர் பிரசாந் நாயக் Prashant Nayak தலைமையில் நடைபெற்றது.

இவ்வருட விழாவில் இசைக்கலை வளர்ச்சிக்கு மதிப்பார்ந்த பங்களிப்பு வழங்கிக் கொண்டிருக்கும் ஒருவருக்கும், வழங்கி அமரரான ஒருவருக்குமாக ஈழத்தைச் சேர்ந்த இரு பெண் இசை விற்பன்னர்கள் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிட்டுக் கூறக்கூடிய சிறப்பம்சமாகும் கௌரவிக்கப்பட்ட ஒருவர் யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த திருமதி சிவதாரணி சகாதேவன் என்பவர் சிறு வயதிலிருந்தே வீணையினை மிக ஆர்வத்துடன் பயில ஆரம்பித்துச் சென்னை அடையார் சங்கீதப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கலைமாமணிகள் கே.பி.சிவானந்தம், கே.சுவாமிநாதன் ஆகியோரிடம் வீணை இசையினை வரன் முறையாகக் கற்றுச் "சங்கீத வித்வான்" பட்டம் பெற்ற இவர், யாழ் கல்வித் திணைக்களத்தில் சங்கீத விரிவுரையாளராகக் கடமையாற்றியவர். 1982லிருந்து ஐக்கியராச்சியத்தைத் தன் நிரந்தர வாழ்விடமாகக் கொண்ட சிவதாரணி "வீணாலயா" என்ற இசை வளர்க்கும் நிறுவனத்தைத் தாப்பித்துத் தன் அர்ப்பணிப்பும் அயரா துழைப்பும் இணைந்த கற்பித்தலின் மூலம் திறமை மிகு பல இளம் வாரிசுகளை இசைத் துறைக்கு வழங்கி வருகின்றார். வீணையிசையினைக் கற்பிக்கும் குரு என்ற வகையில் அவர் - தெய்வீக இசைக் கருவியான வீணையின் அசலான உயரிய நாதத்தினை மதம், மொழி கடந்து வெளிக்கொணர வேண்டுமென்பதில் உள்ளார்ந்த பற்றுக் கொண்டவர். வீணையிசையில் தான் எய்தியுள்ள அதி திறமை காரணமாகப் புதிய புதிய யுக்திகளைக் கையாண்டு மரபும் புதுமையும் இணைந்த உயர்தர இசை நுட்பங்களைத் தன் பக்குவமான பயிற்றுவிப்பின் மூலம் பாவம், தாளம், லயம் என்பன சிறந்தமைய வெளிப்படுத்துவதில் வல்லவரான இவர் இரசிகர்களைத் தன் வாத்தியத்துடன் ஒன்ற வைப்பதனால் அவரின் இசையை இரசிப்பதற்கென்றே இங்கே இலண்டனிலும் வெளிநாடுகளிலும் இசைப்பிரியர்கள் பலருளர். சிவதாரணி தன் மாணவர்கள் பங்கு கொள்ளும் பலசமய கலாச்சார நிகழ்வுகள் தர்ம

அமைப்புகளுக்கு நிதி சேகரிக்கும் நோக்குடன் ஒழுங்கமைக்கும் கலை நிகழ்வுகள் எனப் பல சந்தர்ப்பங்களில் மாணவர்கள் வீணை இசையில் எய்தியுள்ள சிறப்பான தேர்ச்சியினையும் அதனூடாக வீனை இசையைக் கற்பிக்கும் தனது அதி உயர் திறனையும் வெளிப்படுத்தி வரும் ஒரு போதக ஆசிரியருமாவார். இதுவரை 35 மாணவர்களை அரங்கேற்றிய சிவதாரணியின் மாணவர்கள் பலர் சங்கீதத்தில் தொடர்ந்தும் உயர் பயிற்சி பெற்று வருவதே அவரின் ஆற்றல் மிகு கற்பித்தலுக்குக்கான வெற்றியெனலாம். குருவும் சிஷ்யர்களும் இணைந்து இந்தியா, மலேசியா, கனடா என உலகின் பல பாகங்களிலும் இசை நிகழ்வுகளை மிகச் சிறப்பாக நடத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. வீணாலயத்தின் அதிபராகக் கடமையாற்றும் இவர் இலண்டன் தமிழ்ப் பாடசாலையிலும், கரோ தமிழ்ப் பாடசாலையிலும் வீணை ஆசிரியராகக் கற்பித்து வருகின்றார். இவ்வாறு தெய்வீக இசைக் கருவியினூடாகக் கர்நாடக இசைத்துறைக்குத் திருமதி சிவதாரணி சகாதேவன் கடந்த பல ஆண்டுகளாக ஆற்றிவரும் உயர்வான பணிகளைக் கவனத்திற்கெடுத்து என இந்தியக் கலைகளுக்கு அவர் நல்கிய பங்களிப்பினை இரத்தின சுருக்கமாக மதிப்பிட்டுள்ள Milapfest அவருக்கு சங்கீத ஆச்சாரிய இரட்ண விருது 2016 வழங்கிக் கௌரவித்துள்ளது.

இவ்வாண்டுக்கான மற்றொரு கௌரவிப்பு, சென்னை அடையார் சங்கீதக் கல்லூரியின் கர்நாடக இசைப்பட்டதாரியும் யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் முன்னாள் தலைவரும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் சங்கீத ஆசிரியரும் சிங்கப்பூரிலும் தொடர்ந்து இலங்கையிலும் இறுதிக் காலத்தில் இங்கிலாந்திலும் தன் அர்ப்பணிப்பான இசைப்பணி மூலம் கர்நாடக இசைக்கலைக்குப் பெரும் பங்களிப்பு வழங்கி வரும் பலநூறு மாணவர்களை இசை வாரிசுகளாக உருவாக்கிய பிரபல குருவாகச் சிறப்புப் பெற்றவரும் "எழிசை மாமணி" ஈழத்து எம்.எஸ். என அவரின் இனிய இசை காரணமாக விதந்து போற்றப்பட்டு வரும் இலண்டன் தமிழ் நிலைய ஆழுநராகவும் நுண்கலைத்துறைப் பரீட்சகராகவும் சேவையாற்றிய அமரர் சரஸ்வதி பாக்கியராசாவின் பெருமை மிகு இசைத்துறைப் பணிகளைக் கவனத்திற்கெடுத்து smt Packiarasa was an innate born guru என இந்தியக்கலைகளின் வளர்ச்சிக்கு அவர் வழங்கிய சேவைகளைப் புகழ்ந்து மதிப்பிட்டுள்ள Milapfest - அவரது ஞாபகார்த்தமாக அவர் பெயரில் கர்நாடக இசையினை வாய்ப்பாட்டு - உயர் பிரிவில் கற்கும் இங்கிலாந்தைச் சேர்ந்த மிகத் திறமையான மாணவர் ஒருவருக்கு ஆண்டுதோறும் புலமைப்பரிசில் smt Saraswathy packiarajah scholarship" வழங்கப்படவுள்ளதாக அறிவித்து அமரரான இசை விற்பன்னரை இங்கிலாந்தில் இயங்கும் இந்தியக் கலைகளின் அமைப்புக் கௌரவித்துள்ளது.

இந்தியக் கலை வளர்ச்சி அமைப்பு - The indian arts development trust milapfest -இன் மேற்குறித்தன போன்ற வழங்கப்பட்ட ஆறு விருதுகளும் This years awardees weve chosen by a nationally consitituted jury panal of six members. The jury have had a though time deciding the winners from an extremely talanted and deserving group of amazing arts professional எனத் தங்கள் 2016 வருடாந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளமை அவர்கள் வழங்கிய கௌரவங்கள் எத்துனை பெறுமதி மிக்கவை என்பதனைத் தெளிவாக்கும் வாசகங்களாகும்.



# இன்குலாப்

## மானுடம் பாடிய

# கவிஞன்

## -மு.சிவகுருநாதன்

# (டிச.01. 2016, இன்று மரணித்த புரட்சியாளர், சிந்தனையாளர், கவிஞர், எழுத்தாளர் தோழர் இன்குலாப் அவர்களுக்கு இறுதி அஞ்சலி)

"இன்குலாப் ஜிந்தாபாத்" எனும் எழுச்சி முழக்கம் இன்று

புதிய பொருள் பெறுகின்றது",
(பேரா. அ.மார்க்ஸ் முகநூலில்)

"பொன்னொளி சிவந்ததடா இருள்பொசுங்கும்

பொழுதொன்று விடிந்ததடா

என்று குரல் எழுப்பிக் கொடிய அடக்குமுறை நிலவிய அவசரநிலைக் காலம் உட்பட ,வாழ்நாள் முழுவதும் சொந்த வாழ்க்கையைப் பெரிதாக எண்ணாமல்,பொதுவாழ்க்கையையே பெரிதும் நேசித்த புரட்சியாளர், சிந்தனையாளர், கவிஞர், எழுத்தாளர் தோழர் இன்குலாப்",

(பேரா. சே.கோச்சடை முகநூலில்ஞ்)

"இன்குலாப் எழுதும் கவிதைகள், கவிதைகளே அல்ல என்று யாரோ ஒருவர் கூறிவிட்டாராம். போகட்டும். இன்குலாபே ஒரு கவிதைதான் என்பதை அவர் அறிந்திருக்கவில்லை போலும்",

(எஸ்.வி.ராஜதுரை, ''சாட்சி சொல்ல ஒரு மரம்' தொகுப்பிலுள்ள 'இன்குலாப் என்னும் மோகனப் புன்னகை' கட்டுரை, விடியல் வெளியீடு, ஆகஸ்ட் 2012)

சில மாதங்களுக்குமுன்பு குடந்தையில் அ.மார்க்ஸ் உடனான சந்திப்பில் தோழர் நெடுவாக்கோட்டை உ.ராசேந்திரன் உடல்நலம் குறித்த பேச்சு வந்தது. ராசேந்திரனுக்கு ஒரு விழா எடுப்போம். அதற்கு இன்குலாப்பை அழைத்து வருவோம், என்றார் மார்க்ஸ். அவருடைய உடல்நலம் ஒத்துழைக்குமா என்ற சந்தேகத்தைச் சொன்னபோது, ராசேந்திரன் இன்குலாப் தலைமையில் திருமணம் செய்துகொண்டவர். இன்றும் அவரை வழிக்காட்டியாக ஏற்பவர். இதைவிட வேறு மகிழ்ச்சி அவருக்கு இருக்கமுடியாது, என்றும் சொன்னார். விழாவிற்கான ஏற்பாடுகள் ஏதும் நடக்கவில்லை. ஆனால் இன்று இன்குலாப் நம்மிடம் இல்லை.

"மனுசங்கடா நாங்க மனுசங்கடா", என்னும் புகழ்மிக்க பாடலை எழுதியவர் இன்குலாப். அதைப் பட்டி தொட்டியெல்லாம் கணிரென்று தனது குரலால் கொண்டு சேர்த்த பேரா.கே.ஏ.குணசேகரன் ஆகிய இருவரும் இன்று நம்மிடம் இல்லை. காலம் நம்மிடமிருந்து இவர்களைப் பிரித்துவிட்டது. ஆனால் இவர்களது படைப்புகள் என்றும் நிலைக்கும். அப்பாடலைக் கீழேத் தருகிறேன்.

**"மனுசங்கடா நாங்க மனுசங்கடா**
**உன்னப் போல அவனப் போல எட்டுச்சாணு உயரமுள்ள**
**மனுசங்கடா நாங்க மனுசங்கடா**
**எங்களோட மானம் என்ன தெருவில கிடக்கா - உங்க**
**இழுப்புக்கெல்லாம் பணியறதே எங்களின் கணக்கா**
**உங்களோட முதுகுக்கெல்லாம் இரும்புல தோலா**
**நாங்க ஊடு புகுந்தா உங்க மானம் கிழிஞ்சு போகாதா**
**உங்க தலைவன் பொறந்த நாளு போஸ்டர் ஒட்டவும்**
**உங்க ஊர்வலத்தில தர்ம அடிய வாங்கி கட்டவும்- அட**

எங்க முதுகு நீங்க ஏறும் ஏணியாகவும் டி நாங்க
இருந்தபடியே இருக்கணுமா காலம் பூராவும்
குளப்பாடி கிணத்து தண்ணி புள்ளய சுட்டது
தண்ணியும் தீயாச் சுட்டது டி இந்த
ஆண்டைகளின் சட்டம் எந்த மிராசைத் தொட்டது
சதையும் எலும்பும் நீங்க வச்ச தீயில் வேகுது - உங்க
சர்க்காரும் கோர்ட்டும் அதுல எண்ணய ஊத்துது
எதைஎதையோ சலுகையின்னு அறிவிக்கிறீங்க- நாங்க
எரியும்போது எவன் மசுர புடுங்க போனீங்க டி டேய்
மனுசங்கடா நாங்க மனுசங்கடா
உன்னப் போல அவனப் போல எட்டுச்சாணு உயரமுள்ள
மனுசங்கடா நாங்க மனுசங்கடா",
(இன்குலாப்)

எந்த அக்கரையும் அவரால் எடுக்க முடியவில்லை. ஆண்மக்களில் ஒருவனுக்கு செல்வன் என்னும் இனிய தமிழ்ப் பெயரையும்ம் மற்றவனுக்கு 'இன்குலாப்' என்னும் புரட்சிப் பெயரையும் சூட்டிய அவர் புரட்சி இயக்கங்களுடன் தொடர்பு கொண்டிருந்த பிற பேராசிரியர்களைப் போலத் தனது சொந்தப் பிள்ளைகளுக்கு உயர்கல்வி பெறும் வாய்ப்பை உருவாக்கித் தரவில்லை. போதாதற்கு நீண்ட இடைவெளிக்குப் பிறந்த பெண் குழந்தை வேறு. கடன் தொல்லை. மாத ஊதியத்துடன் பிடிப்புகள் போக, சம்பள தினங்களில் வெறுங்கையுடன்தான் வீட்டுக்குத் திரும்புவார்.. எனினும் அவரது



"சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த இன்குலாப் எந்த மத அடையாளங்களையும் தரித்துக் கொண்டதில்லை. சாகுல் ஹமீது எனும் தன் இயற்பெயரைக் கூட அவர் எந்நாளும் முன்னிலைப்படுத்திக் கொண்டதில்லை", என்று பேரா. அ.மார்க்ஸ் முகநூல் பதிவில் குறிப்பிடுகிறார்.

"தனது இரண்டு ஆண மக்களின் படிப்பு குறித்தோ அவர்களது எதிர்காலம் குறித்தோ

இல்லம் 'திறந்த வீடாக' இருந்தது. உடல் நோவும் மன வேதனையும் ஓர் புறமிருந்தாலும், வந்தவர்க்கெல்லாம் அருஞ்சுவை உணவு வழங்கி வந்த அவரது துணையாரின் ஈகைப்பண்பு பாடலுக்குரியது", என்று எஸ்.வி.ராஜதுரை பதிவு செய்கிறார். ('சாட்சி சொல்ல ஒரு மரம்' தொகுப்பிலுள்ள 'இன்குலாப் என்னும் மோகனப் புன்னகை' கட்டுரை)

இசை மற்றும் நல்லத் திரைப்படங்களில் அவருக்கிருந்த ஈடுபாடு, ஜானிகான்கான் தெருவின் இரைச்சல், அழுக்குக்கும் இடையில் அவரிடம் வலுப்பெற்ற சூழலியல் அக்கறை, ஜன்னலுக்கு வெளியிருந்த அசோக மரம், அதில் இருக்கும் பறவைகள், அம்மரம் வெட்டப்பட்டபோது அவருடைய மனவேதனையை வெளிப்படுத்திய 'சாளரம்' இதழில் எழுதிய கவிதை ஆகியவற்றை எஸ்.வி.ஆர். பெருமை பொங்க வெளிப்படுத்துகிறார். அறுபதாம் வயதில் அற்புதமான நாடகாசிரியராக மலர்ந்ததையும் குறிப்பிடுகிறார். (மேலே குறிப்பிட்ட அதே நூல்.)

"என்னுடைய முதல் நூல் 'எதுகவிதை' யை நான் அவருக்குத்தான் அர்ப்பணித்திருந்தேன். அந்த நூலுக்கு அவர்தான் முன்னுரையும் எழுதியிருந்தார். அந்த நூலில் நான் அன்றைக்கு இருந்த இளமைத் துடிப்புடனும் உணர்ச்சிப் பெருக்குடனும் பாரதிக்குப் பிந்திய மகாகவி என அவரை நான் குறிப்பிட்டிருந்தேன். என்னைப் போன்ற அன்றைய இளைஞர்கள் பாரதிக்குப் பின் சம கால அரசியலில் அச்சமின்றி நேர்மையாய்த் தன் குரலை ஒலித்த ஒரு பெருங் கவியாய் அவரைத்தான் கண்டோம். பாரதி காலத்திய ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசியலின் வடிவம் பிரிட்டிஷ் எதிர்ப்பு என்றால் இன்குலாப் காலத்திய ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசியலை நக்சல்பாரிகள்தான் முன்னெடுத்திருந்த சூழலில் அவர் எள்ளளவும் தயக்கமின்றி அவர்களுடன் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார்.

அன்று அப்படி நக்சல்பாரிகளுடன் அடையாளப்படுத்திக் கொள்வது என்பது அத்தனை எளிதானதல்ல. கடும் அடக்குமுறைகளை எதிர்கொள்ள நேரிடும் என்பது குறித்த எந்த அச்சமும் இன்றி அவர் தன் கவிதைகளையே ஆயுதமாக்கிக்




களத்தில் நின்றார்" என்று அ.மார்க்ஸ் தனது முகநூல் அஞ்சலிப் பதிவில் எழுதுகிறார்.

இன்குலாப்பின் இராஜராஜேச்வரியம்' கவிதைக்காக தூற்றப்பட்டது, அவரது கவிதை பாடநூல்களிலிருந்து நீக்கப்பட்டது, இராஜராஜனுக்கு மு.கருணாநிதி சிலையெடுத்த நிகழ்வில் அக்கவிதையை உ.ராசேந்திரனுடன் விநியோகித்தது, போலீசின் கைகளில் சிக்காமல் சைக்களில் தப்பிவந்தது ஆகியவற்றை அ.மார்க்ஸ் தனது தீராநதிக் கட்டுரையில் விரிவாக எழுதியிருப்பார். (அ.மார்க்ஸ், 'பேசாப் பொருளைப் பேசத் துணிந்தேன்' உயிர்மை வெளியீடு, ஜூன் 2016)

நக்சலியத்தின் குறுங்குழு ஒன்றில் செயல்பட்டாலும் மானுடம் பாடிய கவிஞன் இன்குலாப். இலக்கிய வடிவங்களை மக்களுக்காக பயன்படுத்திய மகத்தான கலைஞன். தமிழ் தேசியத்தை இறுதியில் விமர்சனமின்றி ஏற்றுக்கொண்ட நிலையிலும் புறக்கணிக்க முடியாத ஒரு ஆளுமையை நாம் இழந்துவிட்டோம்.

"தமிழகத்திலிருந்த ஒட்டுமொத்த நக்சலைட் இயக்கத்தை எடுத்துக் கொண்டால், புரட்சிக்கனல் வீசும் கவிதைகளை, சமூக மாற்றத்துக்கான உள் உந்துதல் தரும் கவிதைகளை எழுதுவதில் ஈடிணையற்றவராக இருந்த ஒரே கவிஞர் இன்குலாப்தான்", என்று எஸ்.வி.ஆர். சொல்வது மிகப்பொருத்தமானது.

எஸ்.வி.ஆர். மேலும் சொல்கிறார். "சாதி ஒழிப்பை, தலித் மக்களின் உரிமையை, விடுதலையைத் தனது திட்டத்தின் மையப் பகுதியாகக் கொள்ளாத எந்தப் புரட்சிகர இயக்கத்தாலும் இந்தியாவில் புதிய ஜனநாயகப் புரட்சியைச் சாதிக்க முடியாது என்னும் கருத்தை எனக்குத் தெரிய 1980 களிலிருந்தே சொல்லி வந்தவர்".

இன்குலாப்பிற்கு செவ்வணக்கம்.

அஞ்சலியாக அவரது கவிதை வரிகள் சில.

"கடந்த ஆயிரம் ஆண்டுகளை
அப்படி ஒன்றும் கைகழுவ முடியாது
மகுடங்கள் துருப்பிடித்திருக்கலாம்
உறைவாள்கள் முனை முறிந்திருக்கலாம்
சபைத் தலைவர்களைத் திருவுளத் தேர்வுசெய்யும்
குடங்கள் ஓவாய் உடைந்திருக்கலாம்
ஓலைகளைச் செல்லரித்திருக்கலாம்
தஞ்சையிலிருந்து காந்தளூர் செல்லும்
சாலைகளில் குளம்பொலிகள் கேட்காதிருக்கலாம்.
அலைமோதும் துறைதோறும்
புலிக்கொடிகள் புரளாதிருக்கலாம்
இருந்தாலும் கடந்த ஆயிரம் ஆண்டுகளை
அப்படி ஒன்றும் கைகழுவ முடியாது.

★

ஆயிரம் ஆண்டுகள் ஒடுங்கிக் கிடந்த
பெருமூச்சும் கண்ணீரும் என்னுள் பீறிடுகின்றன.
ஆயிரம் ஆண்டு மூத்த என் தங்கையின்
காலில் கட்டிய சதங்கை
இந்தப் பெரிய கோயில் முற்றத்தில்
அழுது கொண்டிருக்கிறது இன்னும்
இதனுடைய ஒவ்வொரு கல்லிலும்
என் சகோதரர் தசைகள் பிதுங்கிக் கொண்டிருக்கின்றன.
வல்லாங்கு செய்யப்பட்டுப் பிறந்து கொண்டிருக்கும்
நான் கூசி நிற்கிறேன்.
அடிமைச்சூடு பொறிக்கப்பட்ட
என் முதுகுப் புண் இன்னும் ஆறவில்லை
இதன் விழிகொள்ளாப் பிரம்மாண்டத்தின் கீழ்
சிறிய தேசங்கள் சிதறிக் கிடக்கின்றன.
அடக்கப்படும் நமது பெருமூச்சு
பற்றி கொள்ளட்டும்
தேவடியாளாக்கப்பட்ட நம் தாய்மார்களின்
ஒவ்வொரு மார்பகமும் பந்தங்களாய் மூளட்டும்
மகுடங்களின் மாயையில் மக்களை மூடும்
சூனியக்காரர்களும் சூனியக்காரிகளும்

★

சாம்பலாகட்டும் உண்மைச் சரித்திர விழிப்பில்
சொல்வோம் ஆயிரம் ஆண்டுகளாக
அழுகை மொழி மாற்றிக் கொண்டதில்லை.
ஆத்திரமும் கூடத்தான்
தண்ணீர் நிறம் மாற்றிக் கொண்டதில்லை;
ரத்தமும் கூடத்தான்" கவிஞர் இன்குலாப்

(இக்கவிதை அ.மார்க்ஸின் 'பேசாப் பொருளைப் பேசத் துணிந்தேன்' உயிர்மை வெளியீடு, நூலிலிருந்து எடுக்கப்பட்டது.)

நன்றி: அ.மார்க்ஸ், எஸ்.வி.ஆர்., சே.கோச்சடை.





**தி.மு.க. தலைவர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைப்பெற்று நலமுடன் வீடு திரும்பினார். கலைஞர் நலமுடன் பல ஆண்டுகள் வாழ தமிழர் தகவல் வாழ்த்துகிறது.**

# லண்டன் தமிழர் தகவல் ஆசிரியரின்

# 2016-ல் கோயில் சுற்றுப்பயணங்கள்

| | |
|---|---|
| 1.1.2016 | திருவெற்றியூர் பாடல் பெற்ற கோயில் தரிசனம் |
| 6.1.2016 | திருச்செந்தூரில் பேத்தியின் பிறந்த தினம் சண்முகா அர்ச்சனை |
| 17.1.2016 | திருவண்ணாமலை |
| 18.1.2016 | திருவண்ணாமலையில் ருத்திரா அபிஷேகம் |
| 19.1.2016 | திருவண்ணாமலையிலிருந்து இராமேஸ்வரம் |
| 20.1.2016 | இராமேஸ்வரம் கும்பாபிஷேகம் |
| 21.1.2016 | சென்னை புத்தக கண்காட்சி<br>கடந்த 50 வருடமாக தமிழ்நாட்டில் கோயில்களை தரிசனம் செய்து வருகிறேன். இந்த 50வது வருடத்தில் மீண்டும் கோயில் தரிசிக்கும் எண்ணத்தில் 2016ம் ஆண்டு முழுவதும் கோயில் தரிசனம் கிடைத்தது பற்றி மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். |
| 23.1.2016 | பழனியில் தைப்பூசம் |
| 5.2.2016 | லண்டலிருந்து இலங்கை விஜயம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் பிறந்த மண்ணுக்கு சென்றேன். |
| 12.2.2016 | கோடிஸ்வரனின் மகனின் திருமணம் இரவு சென்னை புறப்பட்டேன். |
| 12.2.2016 | நானும் மோகனும், நாதனும் திருவண்ணாமலை |
| 14.2.2016 | திருச்செந்தூர் |
| 15.2.2016 | திருச்செந்தூர் சண்முகா அபிஷேகம் |
| 16.2.2016 | ஆலங்குடி குருபகவான் தலம் தரிசனம் |
| 17.2.2016 | சிதம்பரம் தரிசனம் |
| 19.2.2016 | திருநின்றவூர் அபிஷேகம் |
| 21.2.2016 | பிள்ளையார்பட்டி |
| 22.2.2016 | திருச்செந்தூர் மாசிமாதம் தேர் திருவிழா |
| 5.2.2016 | லண்டன் அல்பிரட் ஏசாலாவின் மரணச்சடங்கில் கலந்து கொண்டேன். |
| 6.3.2016 | சென்னை வந்தேன் |
| 14.3.2016 | பங்குனி மாதம் கங்கையில் நீராட்டினோம் |
| 15.3.2016 | காசியில் நீராடினோம் |
| 16.3.2016 | காசியில் இருந்து டெல்லி சென்றோம். |

| | |
|---|---|
| 17.3.2016 | டெல்லி இருந்து அரித்துவார் வந்தாம் ரிஷி கேசத்தில் தங்கினோம். |
| 18.3.20.16 | KC கேசம் |
| 19.3.2016 | டெல்லியில் முழு இடமும் சுற்றி பார்த்தபின் |
| 20.3.2016 | சன்னை வந்தோம் |
| 20.3.2016 | சென்னையிலிருந்து அண்ணாமலை வந்தோம். |
| 21.3.2016 | திருச்சி அகிலாண்டேஸ்வரி கோயில் தரிசனம் |
| 22.3.2016 | பழனியில் நின்றோம் |
| 23.3.2016 | பங்குனி உச்சவம் பழனியில் |
| 24.3.2016 | திருச்செந்தூர் அபிஷேகம் |
| 24.3.2016 | இரவு பிள்ளையார்பட்டி |
| 25.3.2016 | தஞ்சாவூர் கும்பகோணம் |
| 25.3.2016 | சுவாமி மலை தரிசனம் அபிஷேகம் |
| 26.3.2016 | மணக்குலபிள்ளையார் தரிசனம் புதுச்சேரியில் |
| 29.3.2016 | திருநின்றவூர் அபிஷேகம் |
| 31.3.2016 | திருத்தணி தரிசனம் |
| 29.4.2016 | சென்னை |
| 4.5.2016 | கபாலீஸ்வரர் பிரதோஷம் |
| 9.5.2016 | கடை திறப்பு விழா வேளச்சேரியில் |
| 10.5.2016 | பற்றி மாகரனுடன் சிறப்பு தரிசனம் சிதம்பரம் |
| 3.6.2016 | திருவண்ணாமலை |
| 15.6.2016 | திருவாரூர் தேர் திருவிழா அற்புதமான காட்சி |
| 16.6.2016 | இன்று திருவாரூர் தேர் திருவிழா |
| 18.6.2016 | மதுரை சென்று தங்கினோம் |
| 19.6.2016 | மதுரை மீனாட்சி அம்மன் தரிசனம் பழமுதிர்சோலை பழனி சென்று |
| 20.6.2016 | திருச்செந்தூர் சுவாமி மலை தரிசனம் |
| 21.6.2016 | தஞ்சாவூர் பெரிய கோயில் தரிசனம் |
| 22.6.2016 | திருத்தணிகை தரிசனம் |
| 25.6.2016 | திருநின்றவூர் தரிசனம் |
| 30.6.2016 | சிதம்பரம் |
| 1.7.2016 | சிதம்பரம் கொடியேற்றம் |
| 2.7.2016 | தஞ்சாவூர் பெரிய கோயில் நந்தியின் சனி பிரதோஷத்தில் கலந்து கொண்டேன். |
| 8.7.2016 | பேரூர் ஆதினத்தின் 50வது விழா சிதம்பரம் சென்றேன். |
| 11.7.2016 | சிதம்பரம் ஆனி உத்தரம் தேர் |
| 11.7.2016 | ஆனி உத்தரம் நடராஜர் அபிஷேகம் தரிசனம் |
| 17.7.2016 | திருச்செந்தூர் |



| | |
|---|---|
| 18.7.2016 | திருச்செந்தூர் சண்முகா அர்ச்சனை |
| 17.7.2016 | பெரிய கோயில் தரிசனம் பின்னர் சிதம்பரம் |
| 2.9.2016 | லண்டனில் இருந்து சிங்கப்பூர் |
| 4.9.2016 | சிங்கப்பூர் இருந்து ஆஸ்திரேலியா வந்து சேர்ந்தேன் |
| 8.9.2016 | மருமகனின் திருமணம் சிட்னி முருகன் கோயிலில் |
| சிறப்பாக | நடைபெற்றது, |
| 19.9.2016 | ஆஸ்திரேலியா சிங்கப்பூர் |
| 25.10.2016 | லண்டன் |
| | லண்டன் |
| | சென்னை |
| 28.10.2016 | திருச்செந்தூர் சண்முகா அர்ச்சனை |
| 29.10.2016 | திருச்செந்தூர் சென்னை |
| 30.10.2016 | சென்னையிலிருந்து |
| 31.10.2016 | திருச்செந்தூர் |
| 1.10.2016 | சண்முகா அர்ச்சனை |
| 2.10.2016 | கந்தசஷ்டி |
| 3.10.2016 | |
| 4.10.2016 | திருச்செந்தூர் |
| 5.10.2016 | |
| 12.11.2016 | சனி பிரதோஷம் தஞ்சாவூர் வந்து தரிசனம் |
| 14.11.2016 | மீண்டும் லண்டன் |
| 8.12.2016 | சென்னை அண்ணாமலை |
| 9.12.2016 | அண்ணாமலை தேர்திருவிழா |
| 10.12.2016 | அண்ணாமலை |
| 11.12.2016 | அண்ணாமலை |
| 12.12.2016 | அண்ணாமலை தீபம் |
| | தீபம் மழை |
| | புயல் சிதறல் |
| | சிறிது நேரமும் நின்று ரசிக்க முடியவில்லை. |



# வாழைப்பழத்தை மட்டும் சாப்பிடுவதன் நன்மைகள்

வயிற்று பிரச்சனைகள் இல்லை

வாழைப்பழம் ஆரோக்கியமானது என்பதில் எந்த ஒரு சந்தேகமும் இல்லை. வாழைப்பழத்தில் பொட்டாசியம் அதிகமாகவும் மற்றும் சோடியம் குறைவாகவும் உள்ளதால், இதில் எண்ணற்ற நன்மைகள் உள்ளடங்கியுள்ளது. பொதுவாக வாழைப்பழத்தை அனைவருமே சாப்பிடலாம். நீரிழிவு, இதய நோய், சிறுநீரக நோய்கள் மற்றும் புற்றுநோய் உள்ளவர்கள் கூட எவ்வித அச்சமும் இல்லாமல் வாழைப்பழத்தை சாப்பிடலாம்.

தொடர்ந்து 4 வாரம் 3 லிட்டர் தண்ணீரை குடித்து ஆச்சரியப்படும் வகையில்

இத்தகைய வாழைப்பழத்தின் நன்மைகளைப் புரிந்து வாழைப்பழத்தை மட்டும் தொடர்ந்து 12 நாட்கள் சாப்பிட இந்த 12 நாட்களும் நன்கு கனிந்த வாழைப்பழத்தை மட்டும் உண்டு வந்து அதோடு தண்ணீர் அதிகம் குடித்து, உடற்பயிற்சியை மேற்கொண்டு, நன்கு ஓய்வும் எடுத்து இதனால் தன் உடலில் தேங்கியுள்ள தேவையற்ற கொழுப்புக்களை கரைத்து, உடல் எடையைக் குறைத்து சிக்கென்று மாறியுள்ளார்கல். அதுமட்டுமின்றி, இன்னும் வேறு சில மாற்றங்களையும் உணர்ந்தார்கல். சரி, இப்போது 12 நாட்கள் தொடர்ந்து வெறும் வாழைப்பழத்தை மட்டும் சாப்பிட்டு தன் உடலில் என்ன மாற்றங்களை உணர்ந்தால் என்று பார்ப்போம்.

வயிற்று பிரச்சனைகள் இல்லை

வாழைப்பழங்களை மட்டும் உட்கொண்டு வந்தல் முதலில் செரிமானம் சீராக நடைபெறுவதை உணர்ந்தல்



உடலில் உள்ள செல்கள் சீராக தொடர்பு கொள்ளவும், மூளையில் சரியான ஆக்ஸிஜன் அளவை பராமரிக்கவும் உதவுகிறது.

இரத்த சர்க்கரை அளவு

வாழைப்பழ டயட்டை மேற்கொள்ளும் முன் இருந்த உயர் இரத்த சர்க்கரை அளவானது, இந்த டயட்டை மேற்கொண்ட பின் சரியான அளவில் இருந்ததாம்.

உடலின் ஆற்றல்

இதுவரை சோர்வை சந்தித்த இவர், வாழைப்பழ டயட்டை பின்பற்றும் போது மிகவும் சுறுசுறுப்புடன் இருப்பதை உணரமுடியும்.

ஹார்மோன் ஏற்றத்தாழ்வுகள்

இதுவரை இருந்த ஹார்மோன் ஏற்றத்தாழ்வுகள் பிரச்சனையானது, வாழைப்பழ டயட்டை பின்பற்றும் போது இல்லை என்பதை நன்கு உணர முடியும்

வாழைப்பழ டயட்டை மேற்கொண்ட பின் செரிமானம் அமைதியாகவும், ஆரோக்கியமாகவும் செயல்படுவதை நன்கு உணர முடிந்தது இதற்கு வாழைப்பழத்தில் உள்ள நார்ச்சத்து தான் காரணம்.

ரிலாக்ஸ்

வாழைப்பழ டயட்டை மேற்கொண்ட பின் மனம் நன்கு அமைதியாகவும், ரிலாக்ஸாகவும் இருப்பதையும் அதுமட்டுமின்றி நிறைய படைப்பாற்றல் அதிகரித்திருப்பதையும் மேலும் எதிலும் நன்கு கவனத்தை செலுத்த முடியும் இதற்கு அதில் உள்ள பொட்டாசியம் மற்றும் ட்ரிப்டோஃபேன் தான் முக்கிய காரணம். இவையே

எடை குறைவு

வாழைப்பழ டயட்டை பின்பற்றியதன் விளைவாக, உடல் எடையில் நல்ல மாற்றம் தெரியும், உடலில் இதுவரை இருந்த பிரச்சனை நீக்கி ஆரோக்கியமாக இருப்பதை உணர முடியும்.

குறிப்பு :

வாழைப்பழ டயட் அனைவருக்குமே பொருந்தாது. குறிப்பாக தைராய்டு பிரச்சனை உள்ளவர்களுக்கு இந்த டயட் சரியானது அல்ல.

எனவே இந்த டயட்டை மேற்கொள்ளும் முன், மருத்துவரிடம் கலந்தாலோசித்து பின் ஆரம்பியுங்கள்.

# வெண் பொங்கல் சாம்பார் எப்படி?



வீட்டுல காய்கறின்னு ஒன்னும் பெருசா இல்லாதப்ப, பொங்கல் மாதிரியான வகைகள்தான் கை கொடுக்கும். சரியா? சுலபமாக ஒரு வெண்பொங்கல் சாம்பார் தயார் பண்ணினால் காலை / மதிய நேரத்துக்கு/இரவு நேரத்திற்கு என பயன்படுத்திக்கொள்ளலாம். வீட்டிற்கு திடீர் விருந்தாளி யாரும் வந்தாலும் இதை விரைவில் எளிதாக செய்து நாம் பரிமாறிவிடலாம்.பொங்கலுக்கு சரியான அரிசி பச்சரிசி, இருந்தாலும் இங்க அது கிடைக்கிறது கொஞ்சம் கஷ்டம்கிறதுனால நான் இப்போது சோனா மசூரி அரிசியில் பொங்கல் செய்வது வழக்கம். உங்ககிட்ட எது இருக்கோ அதை பயன்படுத்திக்கோங்க.

எங்கள் வீட்டில் வெண்பொங்கல் காலை நேர டிபனாக, அல்லது மதியநேரத்திற்கென்று தயாரிப்பது வழக்கம். வழக்கமான நாட்கள் தவிர பொங்கல் தினத்தன்று, விளைந்த காய்கறிகளான (அவரைக்காய், பூசணிக்காய், கத்தரிக்காய், முருங்கைக்காய்..) என எல்லாம் சேர்த்து கதம்ப சாம்பார் வைத்து, வெண்பொங்கலுடன் சாப்பிடுவது எங்க வீட்டு ஸ்பெஷல். தித்திப்பான சர்க்கரைப் பொங்கலுக்குப்பின், ஒரு ரவுண்டு இந்த வெண்பொங்கலும், கதம்ப சாம்பாரும் சாப்பிட்ட பின்னரே அன்றைய பொங்கல் தினம் எங்களுக்கு முழுமைபெறும்.

தேவையான பொருட்கள் :

பச்சரிசி/சோனா மசூரி அரிசி - 1 கப்

பாசி பருப்பு - 1/2 கப்.(1 மணி நேரம் ஊறவைத்தது)

சீரகம் - 1/2 டீ ஸ்பூன்

சின்ன வெங்காயம் 10 (பொடியாக நறுக்கியது)

மிளகு - 1/2 டீ ஸ்பூன்

மிளகாய் வத்தல் - 6 (அ) 8

கறிவேப்பிலை - 1 ஆர்க்கு

எண்ணெய் மற்றும் நெய் தேவையான அளவு

முந்திரி - 10

உப்பு தேவையான அளவு

செய்முறை:

அரிசியை நன்கு களைந்து, 2 கப் தண்ணி, உப்பு சேர்த்து உதிரியாக வேக வைத்துக் கொள்ளவும். சாதத்தை ஒரு பாத்திரத்தில் பரப்பி ஆற வைக்கவும். ஊறவைத்த பாசிபருப்பை, நன்கு களைந்து தேவையான அளவு தண்ணீர் ஊற்றி, வேக வைக்கவும். வேகவைத்த பாசிபருப்பை தண்ணீர் இல்லாமல் நன்கு வடித்துவிட்டு தனியே எடுத்து வைக்கவும். ம்.. பாதி வேலை இதோ முடிந்துவிட்டது. இப்போது வானலியில் கொஞ்சம் நெய் விட்டு முந்திரியை வறுத்து தனியாக வைக்கவும். அடுத்து வானலியில் நெய்/எண்ணெய் விட்டு மிளகு,சீரகம், கறிவேப்பிலை, சின்ன வெங்காயம், வத்தல் தாளித்துக் கொள்ளவும். இனி எல்லாம் மிக்ஸிங் வேலைதான்.

ரெடியான சாதத்தையும், தாளித்தவற்றையும் இப்போது ஒன்றாகப்போட்டு, உப்பு, நெய் தேவைக்குச் சேர்த்துக் கிளறவும். சுவையான பொங்கல் தயார். பொங்கல் சிலருக்கு உதிரியாக இருந்தால்தான் பிடிக்கும். சிலருக்கு குழைவான பொங்கல்தான் பிடிக்கும்.(ஹி..ஹி ..என்னை மாதிரி) மேற்சொன்ன முறை பொங்கல் கண்டிப்பாக உதிரியாகத்தான் வேண்டும் என நினைக்கிறவங்களுக்கு. அதுலயும் குக்கரில் வைத்தால் குழைந்து போகுமோ? என நினைபவர்கள் தாராளமாக இந்தமுறையில் பொங்கல் செய்யலாம். ஆனால் தனித்தனியாக செய்யும்போது கொஞ்சம் நேரம் கூடுதலாகும்.

2வது முறை: குக்கரில் முதலில் எண்ணெய்/நெய் விட்டு தாளிக்கும் பொருட்களைச் சேர்த்து தாளித்து, நெய்யில் வறுத்த முந்திரி, கழுவிய அரிசி, பருப்பு எல்லாவற்றையும் ஒன்றாகச்சேர்த்து, தண்ணி உங்க விருப்பபடி குறைத்து/ அதிகமாக வைக்க உதிரியான / குழைவான பொங்கல் தயாரித்துக்கொள்ளலாம். நேரத்தையும் மிச்சப்படுத்தலாம்.

தேங்காய் சட்னி மற்றும் சாம்பாருடன் சூடாக பொங்கலை பரிமாறவும். பொங்கலுடன் உளுந்தவடை தொட்டுக்கொண்டு சாப்பிட மிகவும் சுவையாக இருக்கும்.



**22** ஆண்டுகளுக்குப் பிறகு சென்னையில் வர்தா என்ற அதிதீவிரமான வர்தா புயல் உருவாகியுள்ளது. வர்தா புயல் வடக்கு தமிழகம் தெற்கு ஆந்திரா இடையே, சென்னை அருகே கரையை கடக்க தொடங்கியுள்ளது.

*முழுமையாக புயல் கரையை கடக்க 3 மணி நேரம் ஆகும் என தெரிகிறது. புயல் கரையை கடந்த பின்பும் 12 மணி நேரம் வரை மழை தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பலத்த காற்று வீசி வருகிறது. தொடர்ந்து வீசும் காற்றால், ஆங்காங்கே சாலைகளில் மரங்கள் முறிந்து விழுகின்றன. நூற்றுக்கும் மேற்பட்ட மரங்கள் முறிந்து விழுந்துள்ளதால் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.*

*இன்று அதிகாலை முதல் சென்னை மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் பலத்த காற்றுடன் மழை பெய்துவரும் நிலையில், 'வர்தா' என்று பெயரிடப்பட்ட இந்த புயல் மேலும் வலுப்பெற்று அதிதீவிர புயலாக மாறியது. 1994க்கு பிறகு 100 முதல் 120 கி.மீ வேகத்தில் வீசும் அதிதீவிர புயலை இப்போது தான் சென்னை சந்திக்கிறது..*

22 ஆண்டுகளுக்கு முன்பு 1994ஆம் ஆண்டு அக்டோபர் மாத இறுதியில் சென்னைக்கும் கடலூருக்கிடையே வங்கக் கடலில் மையம் கொண்டிருந்த புயல் 110 கி.மீட்டர் வேகத்தில் கரையைக் கடந்தது. இதனால் சென்னை முழுவதும் கனமழை பெய்தது, புயல் கரையைக் கடந்த 24 மணி நேரத்தில் தொடர்ந்து கனமழை பெய்தது. சென்னையில் பல இடங்களில் 13 செ.மீ மழை பதிவானது. புயல் காற்றுடன் கனமழையும் பெய்ததால் சென்னையின்

# 22 ஆண்டுகளுக்கு பிறகு சென்னையில் வர்தா புயல்:





இயல்பு வாழ்க்கை முடங்கியது. பலத்த காற்றால் சாலையோரத்தில் இருந்த பல மரங்கள் முறிந்து விழுந்தன.

கிண்டி தேசிய பூங்காவில் 50 அறியவகை மரங்கள் சாய்ந்தன. குடிசை, ஓட்டு வீடுகள் இடிந்து விழுந்தன. புயல் கரையைக் கடந்த போது மின்சாரம் துண்டிக்கப்பட்டதுடன் 6000க்கும் மேற்பட்ட தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டன. புயலால் தமிழகம் முழுக்க 26 பேர் உயிரிழந்தனர். இதில் சென்னையில் மட்டும் 15 பேர் உயிரிழந்தனர். சென்னையில் 4000க்கும் மேற்பட்ட மக்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு உணவு, உடைகள் வழங்கப்பட்டன. புயல் கரையை கடந்தபின்னும் மணிக்கு 70 கி.மீ வேகத்தில் காற்று வீசியது. அப்போது தொழில்நுட்பங்கள் அதிகம் இல்லாதபோதும், அரசு ஊழியர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டதால் துரிதமாக பணிகளில் ஈடுபட முடிந்தது.

வடகிழக்குப் பருவமழையின் போதுதான் காற்றழுத்த தாழ்வு நிலை புயலாக மாறி அது மழையைத் தருவதாக இருக்கும். இந்த ஆண்டு கடந்த அக்டோபர் 30ஆம் தேதிதான் வடகிழக்குப்பருவமழை தொடங்கியது. இதன் பின்னர் வந்த நாடா புயல் காரணமாக எதிர்பார்த்த அளவுக்கு கனமழை மழை பெய்யவில்லை. புயல் வலுவிழந்து கரையைக் கடந்தது.

இந்தநிலையில் வங்க கடலில் கடந்த 7ஆம் தேதி உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி வலுப்பெற்று தாழ்வு மண்டலமாக மாறியது. பின்னர் அது புயலாகவும் உருவானது. 'வர்தா' என்று பெயரிடப்பட்ட இந்த புயல் மேலும் வலுப்பெற்று அதிதீவிர புயலாக மாறியது.





இந்நிலையில் வர்தா புயல் வடக்கு தமிழகம் தெற்கு ஆந்திரா இடையே, சென்னை அருகே கரையை கடக்க தொடங்கியுள்ளது. முழுமையாக புயல் கரையை கடக்க 3 மணி நேரம் ஆகும் என தெரிகிறது. புயல் கரையை கடந்த பின்பும் 12 மணி நேரம் வரை மழை தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பலத்த காற்று வீசி வருகிறது. தொடர்ந்து வீசும் காற்றால், ஆங்காங்கே சாலைகளில் மரங்கள் முறிந்து விழுகின்றன. நூற்றுக்கும் மேற்பட்ட மரங்கள் முறிந்து விழுந்துள்ளதால் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இப்போது உருவாகியுள்ள வர்தா புயல் தீவிரமடைந்து சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய பகுதிகளில் கனமழை பெய்துவருகிறது.

இதுகுறித்து வெதர்மேன் பிரதீப் ஜான் கூறியுள்ளதாவது:

''இதுவரை 6070 மி.மீ மழை பெய்துள்ளது. இன்று பிற்பகல் 100120 கி.மீ வேகத்தில் பலத்த காற்றுடன் புயல் கரையை கடக்ககூடும். புயல் கரையை கடக்க 12 மணிநேரங்கள் ஆகும். புயல் கரையை கடக்கும் வரை பலத்த மழை பெய்யக்கூடும். கரையை கடந்தபிறகு மழை விட்டுவிட்டுப் பெய்யும். இன்று முழுவதும் மழை இருக்கும்.

இரு நாட்களுக்கு தேவையான உணவு, குடிநீர், மருந்துகளை வீட்டில் சேமித்து வையுங்கள். மழையை ரசிக்க கார், பைக்குகளை எடுத்துக்கொண்டு இன்று முழுவதும் வெளியே போகாமல் வீட்டில் இருந்தபடி குடும்பத்துடன் மழையை ரசியுங்கள். குழந்தைகளை வெளியே விளையாட அனுமதிக்கவேண்டாம். அரசு அதிகாரிகள் கேட்டுக்கொண்டால், அரசு முகாம்களுக்கு செல்லுங்கள். வாகனங்களை மரத்தின் கீழ் நிறுத்தி வைக்காதீர்கள். இதனை எனது சீரியஸ் அட்வைஸாக எடுத்துக்கொள்ளுங்கள் என்று கூறியுள்ளார்.

# “சென்று தொழுமின்கள்”

மார்க்கண்டேயர் என்ற பதினாறு வயதுச் சிறுவன், சிவன் மீது இடையறாத பத்தி கொண்டு வாழ்ந்த வரலாறு சைவர்கள் அறிந்த ஒரு வரலாறு. மார்க்கண்டேயருக்காகக் காலனையே காலால் உதைத்தார் சிவன். திருக்கடவூர் திருக்கோயிலில் உள்ள சிவன் யமனைக் காலால் உதைத்து, மார்க்கண்டேயருக்கு அழியா வரங்கொடுத்தார் என்பது புராணம் கூறும் கதை.

திருஞானசம்பந்தர் புராணத்திலும் இந்த வரலாறு பற்றிய விவரம் வருகிறது. சம்பந்தர் மதுரைக்கு வந்ததைத் தரியாத சமணர், மன்னனிடம் முறையிடுகிறார்கள். சைவர்கள் நிறைந்த கூட்டம் ஒன்று இங்கே வந்திருக்கிறது. அவர்களை விரைவில் அகற்றவேண்டும் என்று அரசனிடம் வேண்டுகோள் விடுக்கிறார்கள். அரசனின் அநுமதியுடன் சம்பந்தரையும் அவருடன் வந்த கூட்டத்தையும் தம் மந்திர சக்தியால் அகற்ற முற்படுகிறார்கள். அவர்களின் மந்திரம் எதுவும் பலனளிக்காததால், மடத்துக்குத் தீவைக்கிறார்கள். அது சம்பந்தரின் தேவாரப்பாடலால், பையவே சென்று பாண்டியனுக்கு வெப்புநோயாக வருகிறது. பாண்டிமாதேவி அரசரிடம் ஒரு நிபந்தனை விதிக்கிறாள். சம்பந்தரின் கருணையால் நோய் தீர்ந்தால் அரசரும் சைவத்தைத் தழுவவேண்டும் என்பது அந்த நிபந்தனை. அதன்படி, பாண்டிய மன்னனின் வெப்புநோயைத் தீர்க்கப் போகுமுன்னர், ஞானசம்பந்தப்பெருமான் ஆலவாய்க் கோயிலுக்குச் சென்று ஆலவாய் அரனைத் தொழுதேத்தினார். அந்த வரலாற்றைப் பாடவந்த சேக்கிழார் பெருமான் பின்வருமாறு கூறுகிறார்:

ஆலமே அமுத மாக உண்டுவா னவர்க்க ளித்துக்
காலனை மார்க்கண் டர்க்காக் காய்ந்தனை அடியேற் கின்று
ஞாலம்நின் புகழே யாக வேண்டும் நான் மறைக ளேத்துஞ்
சீலமே ஆல வாயில் சிவபெரு மானே என்றார்

திருஞானசம்பந்தர் புராணம் 740



'அமரர்களுக்காக விடத்தை உண்டு அவர்களைக் காத்தாய். மார்க்கண்டருக்காகக் காலனையே அழித்தாய். உன்புகழ் உலகம் முழுவதும் பரவவேண்டும். அமணரை வெல்ல எனக்கு அருளவேண்டும்' என்று சம்பந்தப்பெருமான் தேவாரம் அருளி வழிபட்டதைக் குறிக்கும் பாடல் இது.

தன் அடியவர்களுக்குத் துன்பம் வந்தபோதெல்லாம் அவர்கள்மீது கருணைகொண்டு இறைவன் காக்கின்றான். நண்ணினர்க்கு நல்லவன் சங்கரன் அல்லவா? தன்னை வழிபடுவோரைக் காப்பதுதான் சிவனின் தொழில். இந்தக் கருத்தைத் தெரிவிக்கும் வகையில் அப்பரடிகளின் தேவாம் ஒன்று அமைந்திருக்கிறது. அந்தத் தேவாரத்திலும் மார்க்கண்டேயருக்கு இறைவன் ஆயுள் வரம் அளித்ததை அப்பரடிகள் அறிவிக்கின்றார்.

'இந்தச் சிவன் தன்மீது அளவற்ற அன்புகொண்ட அடியவரின் ஆயுளைக் காப்பதற்காக, யமனைக் காலால் உதைத்தவன். அப்படிப்பட்ட இறைவனை எல்லோரும் சென்று வழிபடுங்கள். ஒன்றாக இருந்து அந்தக் கூத்தையே நினையுங்கள். தில்லையிலே சிற்றம்பலத்துள் ஆடும் அவனை கண்டு வழிபடுங்கள். உங்களுக்கு ஒரு கவலையும் வராது. அவனின் கை 'என்று வந்தாய்?' என்று கேட்பதுபோல இருக்கிறது' என்கிறார் அப்பர்.

ஒன்றி யிருந்து நினைமின்க ளுந்தமக் கூனமில்லை
கன்றிய காலனைக் காலாற் கடிந்தா னடியவற்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம் பலத்து நட்டம்
என்றுவந் தாயென்னு மெம்பெரு மான்றன் றிருக்குறிப்பே

திரு 4 பதி 81 பா 2

நமக்கெல்லாம் அருளவெனத் தில்லையிலே திருநடனம் செய்துகொண்டு இருக்கும் இறைவனை நாம் சென்று வழிபட்டால் அவன் நமக்கு அருளுவான். அந்த ஆடல் வல்லானை அடைந்து உய்திபெறுவோம் என்பதே அப்பரடிகள் நமக்குச் செப்புகின்ற அறிவுரை.

# ஆன்மிகவாதிகளுக்கு அரிய சந்தர்ப்பம்

*தமிழ்நாட்டில் உள்ள கோயில்களில் திருவிழா காலங்களில் சுவாமியை தரிசிக்கும் வாய்ப்பை நீங்கள் அடைய வேண்டுமா?*

## திருவிழா – சுற்றுலா



தை மாதம் 25ஆம் திகதி புறப்பட்டு மாசி 5ஆம் திகதி வரையிலான திருவிழா சுற்றுலா - பழநி தை பூசமும் - அத்துடன் ஆறுபடை முருகன் கோவில்கள், மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில் தரிசனமும் குறிப்பிட்ட இருக்கைகள் உள்ளதால் உங்கள் இருக்கையை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.



தொடர்புகளுக்கு

**World Travel & Tour**

**020 84659888**

**020 84659666**



# அண்ணாமலையார் கோயில் தீபத் திருவிழா காட்சி




இலண்டனில் தரமான தங்கத்திற்கு
PATHMINI
JEWELLERS
22ct GOLD
892 London Road
Thornton Heath Surrey CR7 7PB
Tel : 020 8665 1111
Fax : 020 8664 8999


ஆடை
ஆபரணம் வாங்க
ஆசை பூர்த்தியாக
நீங்கள் என்றும்
நாடவேண்டிய
ஒரே இடம்
Jk Gold House &
Fashion House
314 - 316 London Road
Croydon Surrey CRO 2TJ
Tel : 020 8684 4577 Fax : 022 8684 4677


எவரெஸ்ட்
24 Loampit Hill
Lewisham SE13 7SW
Tel : 020 8691 2233
அசத்தலான
அசைவ சுவைக்கு
Breakfast Lunch Dinner


Anthoorium
World of Designs
Jewellery
&
Textiles
102, B Burlington Road
New Malden
Surrey KT3 4NT
Tel : 020 8942 8001
Fax : 020 8942 8007
Web : www.anthoorium.co.uk
Email : sales@anthoorium.co.uk


Best Food
11-13 Ealing Road Wembley
Middlesex HAO 4AA Tel : 0208 9000100
364 - 366, Bath Road, Hounslow Middlesex TW4 7HT
Tel : 020 8577 6002, Fax : 020 8570 2323
259 - 261, London Road West Croydon Surrey CRO 2RL
Tel : 020 8684 6269, Fax : 684 4677
எங்கள் வியாபார நிலையத்தில் ஒவ்வொருமாதமும் அதிரடி மலிவு விற்பனையாக
பல பொருட்களை மக்களுக்கு விற்பனை செய்கிறோம்.
ஒவ்வொரு மாதமும் எங்கள் கிளைகளுக்குச் சென்று
மலிவு விலை பொருட்களை பெற்றுக்கொண்டு கணிசமான பணத்தை சேமியுங்கள்

லூசியத்தில் தரமான நகைக்கடை

# தினேஷ்

ஜுவல்லரி டெக்ஸ்டைல்ஸ்

# Thinesh

**Jewellers & Textiles**

276, Lewisham High Street
Lewisham
London SE 13, 6JZ
Tel : 020 8613 9569
www.thinesh-jt.com



*லூசியத்தில் முதலாவது தமிழ்க்கடை*

# கற்பகம்

## தங்கள் சேவையை விரிவாக்கியுள்ளார்கள்

# KATPAKAM

உடன் காய்கறிகள், பழ வகைகள்
உடன் பங்கு இறைச்சி
தமிழ் ஆடியோ, வீடியோ தமிழ்படங்கள்
அனைத்தும்ஒரே இடத்தில்

36, Loampit Hill Lewisham
London SE 13 7SW
**Tel : 208 694 88 10**




AYNGARAN INTERNATIONAL
PROUDLY PRESENTS
ONDRAGA
FOR FURTHER DETAILS :
020 8543 4477
NOW SHOWING - UK SHOW TIMES
12A
CHILDREN WILL BE ALLOWED
FROM FRI 11TH NOV- AT VUE CINEMAS
VUE CROYDON GRANTS, VUE ACTON, VUE CAMBRIDGE, VUE LEEDS THE LIGHT, VUE PORTSMOUTH
VUE SCUNTHORPE, VUE SWANSEA, NEWCASTLE UL, EDINBURGH OMNI CENTRE
HTTP://WWW.MYVUE.COM / OR CALL : 08712 240 240
FROM FRI 11TH NOV - AT EASTHAM BOLEYN - DAILY SHOWS - CALL : 020 8471 4884
FROM FRI 11TH NOV - AT HARROW SAFARI - DAILY SHOWS - HTTP://WWWSAFARICINEMA.COM/ OR CALL - 0208 426 03 03
FROM FRI 11TH NOV - AT PICCADILLY BIRMINGHAM - DAILY SHOWS - HTTP://WWW.PICCADILLYCINEMA.COM - OR CALL : 012 1771 0421
FROM FRI 11TH NOV - AT PICCADILLY LEICESTER - DAILY SHOWS - HTTP://WWW.PICCADILLYCINEMAS.CO.UK - OR CALL : 0116 251 8880
FROM FRI 18TH NOV- AT CINEWORLD CINEMAS
FELTHAM, ILFORD, MILTON KEYNES, WEMBLEY, WANDSWORTH, STOCKPORT
ENFIELD, BRADFORD, ABERDEEN QL, GLASGOW SB, SHEFFIELD, CARDIFF
HTTP://WWW.CINEWORLD.CO.UK OR CALL : 0871 220 1000
SUBJECTED TO CHANGES IN SHOW TIMES WITHIN ADVERTISE PERIOD
STR IN
achcham yenbadhu madamaiyada
GAUTHAM VASUDEV MENON
A.R.RAHMAN
WITH ENGLISH SUBTITLES
JOIN US ON YouTube www.youtube.com/ayngaraneurope
www.facebook.com/ayngaran
web: www.ayngaran.com
https://twitter.com/ayngaran_intl


மீண்டும்
புதுபொலிவுடன்
MITHUS
MITHUS Jewellers
322-324 London Road
Croydon CRO 2TJ
Tel : 020 8683 1756
Fax : 020 8683 1792


SUN MOTORS
Mechanical / Body Repairs / Recovery / Tyres
Tel : 02086920232
R/O 26 Loampit Hill
Elswick Road, Lewisham
London, SE 13, 7SW


லண்டனில் 35 வருடமாக இறக்குமதியாகும்
தமிழர் உணவு வகைகள்
லீலா
தயாரிப்புகள்
உற்பத்தியில் பெருமை, உபயோகிப்பதில் ஆனந்தம்
புலம்பெயர்ந்த ஈழ மக்கள் இலண்டனுக்கு வந்த காலம் தொட்டு இன்று வரைக்கும் தொடர்ந்து இலண்டனில் விற்பனையாகும் லீலா தயாரிப்புகள்.
லண்டன் ஏக விநியோகஸ்தர்கள்
Vaani Foods
தொலைபேசி இலக்கம்
0208 668 7648







படித்துவிட்டீர்களா?
சைவநீதி
உங்கள்
வீடுதேடி
இதழ் வர
சந்தாதாரர்
ஆகுங்கள்


உங்கள் திருமணத்தின் ஏழு வைபவங்களையும்
ஆரெம்கேவியின் "பிரைடல் சில்க்ஸ் ஆப் இந்தியா"
பட்டோடு கொண்டாடுங்கள்
93 years of silk heritage
RmKV
Wedding Silks
Bridal seven
நிச்சயதார்த்தம்
மெஹந்தி
ஊஞ்சல்
முகூர்த்தம்
நலுங்கு
ரிசப்ஷன்
கிருஹப்பிரவேசம்
• சென்னை - ஃபோரம் விஜயா மால், வடபழனி | ஃபீனிக்ஸ் மார்கெட் சிட்டி, வேளச்சேரி | பனகல் பார்க், தி.நகர்
• கோயம்புத்தூர் - ப்ரூக்ஃபீல்ட்ஸ், ப்ரூக்பாண்ட் ரோடு
• திருநெல்வேலி: வண்ணார்பேட்டை | வடக்கு ரத வீதி, திருநெல்வேலி டவுண் • பெங்களூரு - ஓரையன் மால்.
toll free no.: 1800 425 3105 shop online at: www.rmkv.com write us at: bonus@rmkv.com follow us on /rmkvsilks


MEGA
CHRISTMAS
OFFER
Limited Stocks
FOOD
WORLD
YOUR ENTIRE HOME NEEDS AT
NEVER BEFORE SEEN PRICES
AVAILABLE AT ONE STOP SHOP
முதல் முறையாக
லண்டன் மாநகரில்
அதிபிரம்மாண்டமான
முதல் தமிழ் சூப்பர் ஸ்டோர்
BEST PRICE
BEST SERVICE
BEST QUALITY
இங்கு 100 க்கும் மேற்பட்ட இலவச கார் பார்க்கிங் வசதி உண்டு.
SALE
117-119, London Road Mitcham, surrey, CR4 2JA
Tel : 0208 6400 511, foodworld.co.uk
Join & Follow our facebook - fb.com/foodworldmitcham


லண்டனில் முதல் நகை கடை
Western Jewellers
Tooting
020 8767 3445
Wemley
020 8903 0909